# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,561—1965 නොවැම්බර් 19 වැනි සිකුරාදා—1965.11.19

14,561 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 173 | வரவு செலவுக் கூற்றுக்கள் . .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் . .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் . | — | ஆதன விற்பனைகள் .. . | — |
| துணை விதிகள் .. . .. | — | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. . | — | நாணுவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### வல்வெட்டித்துறைப் பட்டினசபை

**பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்**

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ம் 156 ம் பிரிவுகளின் கீழ் வல்வெட்டித்துறைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஹூ அக்டோபர் மீ 27 ந் உ.

### துணைவிதி

1962 ம் ஆண்டு யூன் மாதம் 8 ம் தேதிய 13,162 ம் இலக்க கெசற்றிற் பிரசுரிக்கப்பட்ட துணை விதிகளினுல் இறுதியாகத் திருத்தப்பட்டவாறுன 1949 ம் ஆண்டு யூலை மாதம் 22 ம் தேதிய 10,000 ம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகள் அவற்றின் 1 ம் பிரிவின் கண் "அருவருப்பான அல்லது அபாயமான வியாபாரங்கள்" என் பதன் வரைவிலக்கணத்தில் "ஓடுகள் சேகரித்துவைத்தல்" என்னும் சொற்களையுடனடுத்து பின்வருபனவற்றைச் சேர்த்தல் மூலம் மேலும் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன :—

"ஓடுகள் சேகரித்துவைத்தல்
கம்மாலை வைத்தல்
வள்ளம் கட்டும் சாலை வைத்திருத்தல்
மோட்டார் வாகனங்கள் அல்லது சாதாரண வைசிக்கிள்கள் திருத்தும் அல்லது பழுதுபார்க்கும் தாபனம் வைத்தல்
மின்சகதி வேலைத்தலம் வைத்தல்
இரும்பு ஒட்டும் அல்லது கடையும் ஸ்தாபனம் வைத்தல்
மீட்கப்பட்ட உலோகச் சாமானகள் சேகரித்து வைத்தல்
எண்ணெய சேகரித்துவைத்தல்
வெட்டு மரக்கட்டை அல்லது விறகு சேகரித்து வைத்தல்
மீனைப்பதனிடுதல், உலர்த்துதல் அல்லது அதற்கு ஐஸ் இடுதல்"

2. அதன் 1 ம் துணைவிதியின் இறுதியில் பின்வருவதைச் சேர்த்தல் மூலமும்

"பின்வருவது அபாயகரமானதும் அருவருப்பானதுமான தொழிலாகக் கருதப்படும் :—
பற்றறிககு மின்சக்தி யூட்டுதல்."

11-862—19.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,561


வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடை பிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.